Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 4 விலை ரூபா 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 சித்திரை 26 (09 - 05 - 1991) வியாழக்கிழமை ஓசை: 80

## ஆஸ்பத்திரிப் பொருள்கள் பருத்தித்துறையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பில் கப்பல் மூலம் யாழ்ப்பாண மருத்துவ மனைக்காக எடுத்துவரப்பட்ட சில மருந்துப் பொருள்கள், எரிபொருள்கள் போன்றவை திருடப்பட்டுள்ளன. அண்மையில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த கப்பலில் எடுத்து வரப்பட்ட மருந்துப்பொதிகள் சிலவற்றைப் பிரித்து அதில் இருந்த மருந்து வகைகள் சில (4 ஆம் பக்கம் பார்க்க)

# பொது நலவாய நாடுகள் சில பங்கேற்கும் இனப்பிரச்சினை தொடர்பான யூன் மாத மாநாடு

(லண்டன்)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்கென சில பொது நலவாய நாடுகளும் நோர்வேயும் சேர்ந்து யூன் மாதம் மாநாடொன்றை நடத்தவுள்ளன. இம் மாநாட்டிற்கான ஏற்பாடுகளை அவுஸ்திரேலிய செனட்டர் றோபேட் ஹில் கவனித்து வருகின்றார்.

இம் மாநாடு இந்த வருடத்தின் ஆரம்பத்தில் நடைபெறுவதாக முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது ஆனால் வளைகுடாவில் ஏற்பட்ட யுத்தத்தின் காரணமாக இம்மாநாடு யூன் மாதத்திற்குப் பிற்போடப்பட்டது.

நோர்வே உட்பட சில பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த பல முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளவுள்ள இம் மாநாட்டில் பல முடிவுகள் மேற்கொள்ளப்படும் என (4 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகர் மாணவர்களை பதிவு செய்ய கோரிக்கை

(சங்கானை)

தவணை விடுமுறைக்குப் பிறகு, பாடசாலைகள் ஆரம்பமாகும் போது காரைநகர் மாணவர்கள் கல்வி கற்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டவுள்ளன. காரைநகர் கோட்டத்தணியைச் சேர்ந்த அதிபர்கள் நாளை காலை 8-30 முதல் 10 மணிவரை வட்டு இந்து, பண்டத்தரிப்பு இந்து, விக்ரோறியாக் கல்லூரிகளில் இருப்பார்கள். பெற்றோர் அல்லது மாணவர் தமது வசதிக்கேற்றபடி இப்பாடசாலைகளில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் (4 ஆம் பக்கம் பார்க்க)

## 50 வீதமான மாணவர்கள் பொருள்கள் பெறவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மதிய உணவிற்குப் பதிலாக பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு முத்திரைகளில் 50 வீதமானவற்றிற்கு இதுவரை பொருள்கள் பெற்றுக்கொள்ளப்படவில்லை என வேலணை கோட்ட தெரிவிக்கப்படுகிறது. மேற்படி மாணவர்களுக்குத் தைமாதத்திற்கென வழங்கப்பட்ட உணவு முத்திரைகளிலேயே 50 வீதமானவற்றுக்கு உரிய பொருள்களை மாணவர்கள் பெற்றுக் கொள்ளவில்லையென கூட்டுறவுச் சங்கங்கள் யாழ் செயலக அதிகாரிக்குச் சுட்டிக் (4ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகள் மே 13 முதல் யாழ்ப்பாணத்தில் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கோட்ட அலுவலகத்திற்குட்பட்ட சகல பாடசாலைகளும் யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாக நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இப்பாடசாலைகள் அனைத்தும் அடுத்த திங்கட்கிழமை 13 05 91 அன்று ஆரம்பமாகும். மண்டைதீவுக் கோட்டத்தணியைச் சேர்ந்த பாடசாலைகள் புனித மரியாள் றோ. க. வித்தியாலயத்தில் நடைபெறும். சகல பெற்றோர்களும் தங்கள் பிள்ளை (4 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர் சேதவிபரங்களை உடன் சமர்ப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

வட பகுதி மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள சொத்துக்கள் சேதவிபரங்கள் பற்றிய அறிக்கைகளை உடனடியாக சமர்ப்பிக்கும்படி யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் மீன்பிடி திணைக்களத்திடம் கேட்டுள்ளார்.

இவ்வறிக்கைகள் மீன்பிடி திணைக்கள பிரதேச தகவல் சேகரிப்பாளர்களின் உதவியுடன் தயாரிக்கப்பட உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

(லோ)

## உருக்குலைந்த நிலையில் சரவணையில் இருசடலங்கள்

(யாழ்ப்பாணம்)

சரவணையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பொதுமக்கள் இருவரின் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சரவணை சந்திக்கும் புளியங்கூடல் சந்திக்கும் இடையில் உள்ள கபமாலை வீதிப்பகுதியில் சூட்டுக்காயங்களுக்குட்பட்ட வயோதிபர் ஒருவரின் சடலம் உருக்குலைந்து மீட்டு எடுக்க முடியாத நிலையில் காணப்பட்டதாக அப்பகுதிகளுக்கு தமது வீடுகளைப் பார்வையிடச் சென்றவர்கள் தெரிவித்தனர் இவர் எப் (4ஆம் பக்கம் பார்க்க)

மின்சார, நீர் விநியோக

## ஊழியருக்குச் சம்பளம் வழங்கமுடியாத அவலநிலை

(யாழ்ப்பாணம்)

பிரதேச சபைகளில் பணிபுரியும் மின்சாரப் பகுதி ஊழியர்களுக்கும், நீர் விநியோகப் பகுதி ஊழியர்களுக்கும் சம்பளம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது என உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கூறியுள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா கிராமங்கள் மீது கண்மூடித்தனமாக குண்டுவீச்சு

வவுனியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும் குண்டுவீச்சுத் தாக்குதலினால் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

மாதர் பணிக்கர்மகிழங்குளம் நொச்சிமோட்டை, ஓமந்தை, சோழியாகுளம், சொந்தக்காரன் குளம், பன்றிக்கெய்த குளம், நம்மைக்குளம், பரநட்டான்கல், பனிக்கநீராவி நாவற்குளம், நாம்பன்குளம், மருதோடை, சின்னக்குளம், விளாத்திக்குளம், பத்து வீட்டுத்திட்டம், மாணிக்கவளவு, ஆகிய பகுதிகளிலிருந்தே பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளனர். இடம்பெயர்ந்தவர்கள் மடு, இராவண இலுப்பைக்குளம், கோயில் குஞ்சுக்குளம், புதூர், கைகராயன் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### 'கபில்'

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொம்மாதுறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. கடந்த திங்களன்று மாலை நான்கு முப்பது மணியளவில் இடம்பெற்ற இம் மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் கபில் என்னும் போராளி வீரமரணமடைந்துள்ளார்.

இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## மணலாற்றுப் பிரதேசத்தில் அகோரக் குண்டுவீச்சு

(மணலாறு)

முல்லைத்தீவு மணலாற்றுப் பகுதியைச் சேர்ந்த நாயாறு, செம்மலை பேறை கிராமங்கள் சிறிலங்கா விமானப்படையினரின் கடுமையான வான்மார்க்கத் தாக்குதலுக்கு இலக்காகின ஒரு அவ்ரோ விமானம், இரண்டு பொம்மர் விமானங்கள், ஒரு ஹெலிகொப்டர் என்பன நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தாக்குதலில் ஈடுபட்டன. மக்கள் குடியிருப்பு பகுதிகளை இலக்கு வைத்து குண்டு வீச்சுகளும் ஐம்பது கலிபர் தாக்குதல்களும் நடத்தப்பட்டுள்ளன.

## மாணவர்கள் பெற்றுக் கொள்ளவும்

காரைநகர் மாணவர்களுக்கான பெப்ரவரி மாதத்திற்கு உரிய உணவு முத்திரை 12-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தாக்குதலால் இராணுவம் பின்வாங்கியது

பனிக்கநீராவி என்றவிடத்தில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்று விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தினர் தாக்குதலையடுத்து. இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்று இறம்பைக்குளச் சந்தியில் நிலை கொண்டுள்ளனர். இராணுவ தரப்பின் சேத விபரம் தெரியவில்லை.

காலை முதல் தொடர்ச்சியாக இரண்டு குண்டு வீச்சு விமானங்களும் அவ்ரோ இரண்டும், இரண்டு உலங்கு வானூர்திகளும் தாக்குதலில் ஈடுபட்டன.

வவுனியாவில் பிரான்ஸ் நாட்டு

## மருத்துவகுழு மீது தாக்குதல்; சிறிலங்கா அரசு வருத்தம்

(கொழும்பு)

வவுனியாவில் அண்மையில் பிரான்ஸ் மருத்துவக்குழு உறுப்பினர்கள் மீது வானத்திலிருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் பற்றி விசாரிக்க சிறிலங்கா அரசாங்கம் ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளது.

கடந்தமுன்றாம் திகதி வெள்ளிக்கிழமை ஹெலிக்கொப்டரிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் ஒரு டாக்டரும், இரண்டு தாதியரும், வாகனச்சாரதியும்காயமடைந்தது தெரிந்ததே. இச் சம்பவம் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட ஆணையாளர் பத்து நாட்களுக்குள் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்க (4 ஆம் பக்கம் பார்க்க)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி லெட்சுமி கதிர்காமத்தம்பி

(மயில்வாகனம்)

மலர்வு: 07-06-1950 உதிர்வு: 07-05-1988

அன்பு உறைவிடமாம் இடமே
அம்மா தான் என்பார்கள்!
அதற்கு உதாரணமே நீங்கள் தான் 'தாயே'
குடும்பத்தின் விடிவெள்ளியாய் ஒளி வீசி விட்டு
மெழுகுவர்த்தியாய் உள்ளம் உருகி அணைந்தீர்களே!
எங்கள் தாயே! எங்களை இருளில் தவிக்கவிட்டு
சென்று விட்டீர்களே!

எங்கள் அன்புத்தாயே!

மூன்றாண்டு ஓடி மறைந்தாலும், எங்கள் இருள் சூழ்ந்த இதயத்தில் தெய்வமாய் வீற்றிருக்கின்றீர்கள் தாயே!
எத்தனை ஆண்டு ஓடி மறைந்தாலும் உங்களது நினைவு எங்களை விட்டு மறையாது தாயே!

தங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஏறாவூர், 4 ஆம் குறிச்சி.

தங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள்

(R-1376)

---

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தொழில் நுட்பவலர் தரம் 11 'எ' தற்காலிகம் பதவிக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 17.06.91 ஆம் தேதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும.

சம்பளம்:- ரூபா 2375/- (நிலையானது) மாதமொன்றுக்கு.

★ இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப் படிகளும் செலுத்தப்படும்.

வயதெல்லை:- 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப் படிவங்களும் விபரங்களும் இப் பல்கலைக்கழகத்தில சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற 9X10 சமீற்றர் அளவுடைய தபாலுறை அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள, அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச சட்டசபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்

குறிப்பு:- மேற்குறிப்பிட்ட பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில நியமனங்களும மேற்கொள்ளப்படும் (ஒப்பந்த அடிப்படையில நியமனத்திற்கு வயது எல்லை பொருந்தமாகாது)

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991 05 06

(B/2485)

---

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 05 - 09

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் வல்வெட்டித்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது உடுப்பிட்டியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**நித்தி/ஜெயம்**
(கந்தையா அபிமன்னசிங்கம் - வல்வெட்டி)

இம்முற்றுகையின் போது சிறிலங்கா இராணுவத்தினரால் இப்பகுதியில் பரவலாகவும், பொலிகண்டி நூல்நிலையத்தினுள் வைத்து குண்டு வைத்தும் கொல்லப்பட்ட

**90 பொது மக்கள்**

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

தொண்ணூறு உயிர்கள்
துடித்துப் பதைக்க
குண்டுகள் வைத்துக்
கொன்றனர் பாவிகள்!
திண்ணிய நெஞ்சம்
போரட்டும் என்றே
மண்மீதில் வாழ்ந்த
மக்களை அழித்தனர்!
படுகொலை எமையைப் பணிய வைக்காது
வாழும் மக்கள் துயரம் தொலையும்!
கேடுகள் களைந்தொரு
மேன்மை விளையும்! - தாயக
விடுதலை வேட்கை மேலெழும்!

- கவிதை இளையவன்

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-2484)

---

ஜேர்மனியில் 26. 03. 1991 இல் கார் விபத்தில் அகால மரணமடைந்த எமது அன்புக்குரியவர்களின்

## 45 ஆம நாள் நினைவஞ்சலி



**திரு. தாமோதரம் பிள்ளை திருஞானேஸ்வரன்**

தோற்றம்: 07-10-1957 மறைவு: 26-03-1991

உங்கள் பிரிவால் துயருறும்
அம்மா, மாமா, சகோதரங்கள். மனைவி மகன், மாமா, மாமி, மச்சாளமார்.
சுழிபுரம் கிழக்கு, தொல்புரம்.

(B/2474



**திருமதி கனகலிங்கம இராஜேஸ்வரி**

தோற்றம் 07-04-1957 மறைவு: 26-03-1991

உங்கள் பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள், மாமா, மாமி, மச்சாள்மார், மருமக்கள்.
கட்டுவன், ஊரங்குணை.



**செல்வி சுப்பையா சுசீலா**

தோற்றம்: 19-07-1962 மறைவு: 26-03-1991

உங்கள் பிரிவால் துயருறும்
அம்மா, ஐயா, அக்காமார், அண்ணை, தம்பிமார், தங்கை, மச்சான்மார், மருமக்கள், பெறமக்கள்.
கட்டுவன், ஊரங்குணை.

## சிந்தனைக்கு

மனிதர்களை உருவாக்குவது, உதவிகள் அல்ல தடைகள் தான்; வசதிகள் அல்ல, சிரமங்கள் தான்.

வில்லியம் மேத்யூஸ்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 9-05-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 024-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண்: 03


# கண்டனம் போதாது தடைகள் வேண்டும்

இலங்கையில் இடம்பெறும் இன அழிப்புத் தொடர்பாக உலக சமூகம் எவ்வித கரிசனையும் கொள்ளவில்லை வளைகுடாச் சிக்கலால் இலங்கையில் தமிழ் இனம் அழிக்கப்படுவதை சகலரும் மறந்துவிட்டார்கள் தொடர்ந்தும் சிறுபான்மையினரான தமிழரின் கோரிக்கைகளுக்கு உலகம் செவி சாய்க்காமல் இருக்கிறது என அவுஸ்திரேலிய வெளிவிவகாரம் மற்றும் வர்த்தகப் பாதுகாப்புக் குழுவின் தலைவர் ரெட் கிரேஸ் அவுஸ்தரேலியப் பாராளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இனப்பிரச்சினை கூர்மையடைந்த பின்னர் 25,000 க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இப்படுகொலைகளுக்கு சிறிலங்காஅரசாங்கமும், இந்திய இராணுவமும் காரணமாக இருந்துள்ளன. சுமார் இரண்டரை ஆண்டுகள் இலங்கையில் இருந்த இந்திய இராணுவம் 7000 க்கும் மேற்பட்ட தமிழரைக் கொன்றது அதே வேளை கடந்த ஜூன் மாதம் மோதல் ஆரம்பித்த பின்னர் (10 மாதத்திற்குள்) ஏறக்தாழ அதே அளவு தமிழரை சிறிலங்கா இராணுவமும் கொன்றது. தமிழரின் மக்கள் தொகையைப் பொறுத்தும் கொல்லப்பட்ட கால அளவைப் பொறுத்தும் இந்த அளவுகள் உயர்வானதாகும்.

ஆனால், தமிழர் மீதான இப்படுகொலையை உலகம் கண்டதாக இல்லை இஸ்ரேல் ஆக்கிரமித்த நிலப் பரப்பில் நான்கு பாலஸ்தீனியர் கொல்லப்பட்டதற்கு கண்டனக் குரல் எழுப்பிய நாடுகளும் விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக் கோரிய ஐ.நாவும் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் பிரதேசத்தில ஆயிரக் கணக்கில் தமிழர் படுகொலை செய்யப்பட்டபோதும், மானபங்கபடுத்தப்பட்டபோதும் கண்டு கொள்ளவில்லை. கண்டிக்கவும் இல்லை.

ஈராக்கின் வடக்கில் இருந்து குர்திஷ் அகதிகள் விரட்டப்பட்டபோது ஈராக்கின் இறைமை, தன்னாதிக்கம் என்பனை நிறைமதியாது நடவடிக்கை எடுத்த நாடுகளும் அதைக் கண்டுகொள்ளாமலும் இருக்கும் ஐ.நா ஸ்தாபனமும், இலங்கையில் தமிழர் சனத்தொகையில் ஏறத்தாழ 50 வீதத்தினர் தமது தாயக மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டு நிர்க்கதியாக்கப்பட்டுள்ளமையைக் கண்டுகொள்ளவில்லை.

உலக நாடுகள் இவ் விவகாரத்தில் அக்கறை கொண்டிருப்பின் சிறிலங்கா இந்த இனப்படுகொலையை தீவிரமாக மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருக்கும். ஏனெனில் சிறிலங்கா உதவிகளில் தங்கியுள்ள பின்தங்கிய நாடு இந்நிலையில் உலகின் அழுத்தத்திற்கு உள்ளாகியே ஆகவேண்டிய நாடு.

ஆகையினால் உலகம் சிறிலங்கா அரசாங்கத்தின் மீது கொடுத்த அழுத்தங்கள் போதாது என்பதே உண்மையாகும். பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயர் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விவகாரத்தில் தாம் அக்கறையாக இருப்பதாகக் குறிப்பிட்டார் அதற்காக சிறிலங்காவிற்கு வழங்கவிருந்த 30 மில்லியன் டவுண் உதவியை இடை நிறுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால் இலங்கையில் இனப்பிரச்சினைக்கு வித்திட்டவர்களான பிரித்தானியரின இந்நடவடிக்கை போதுமானதாக இல்லை.

எப்பொழுதும் பாலஸ்தீனப் பிரச்சினையிலோ அன்றி குர்திஷ் இனப்பிரச்சினையிலோ மேற்குலகிற்கு உள்ள தீவிர ஈடுபாடு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இருந்ததில்லை ஏனெனில் மேற்குலகின் நலன்கள் மத்திய கிழக்கில் குவிந்து போயுள்ளமையே இதற்குக் காரணமாகும்.

உண்மையில், பிரிட்டன் உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இலங்கையில் நடைபெறும் இன ஒடுக்கலையும் படுகொலைகளையும் நிறுத்த வேண்டுமாயின் சிறிலங்காவிற்கான உதவிகளை நிறுத்தினால் மட்டும் போதாது. சிறிலங்காவுடனான சகல வர்த்தகங்களையும் துண்டித்துக்கொள்ள வேண்டும். அதாவது ஒரு பொருளாதாரத் தடையை அமுல்படுத்த வேண்டும்.

அதைவிடுத்து அவதானிப்புக்களினாலும், கண்டனங்களாலும் நன்மை ஏதும் ஏற்படப்போவதில்லை அவ்வாறு இல்லாவிடில் இந்நாடுகளின் செயற்பாடுகள் ஒருகையால் அடித்து மறுகையால் அணைக்கும் நடவடிக்கையை ஒத்ததாகும். இதனால் எதுவித பாதிப்பும் சிறிலங்காவிற்கு ஏற்படப் போவதும் இல்லை சிறிலங்கா தனது கொள்கையைக் கைவிடப் போவதும் இல்லை.

பீகார் மாநிலத்து

# தகவல்களை ஆராய்ந்தே தேர்தல்கள் பற்றி முடிவு

**-டி. என். சேஷன்**

(புதுடில்லி)

பீகாரில் தேர்தல்களை ஒத்தி வைப்பது பற்றிய எந்த முடிவும் சம்பந்தப்பட்ட எல்லாத் தகவல்களையும் சீர் தூக்கிப் பார்த்த பின்னரே மேற்கொள்ளப்படும் என்று தலைமைத் தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் கூறியுள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் செய்தியாளரிடம் பேசிய அவர் உள்துறை அமைச்சகத்தின் அறிக்கையை எதிர்பார்த்திருப்பதாகவும், மத்திய அரசு அவ்வறிக்கையை அனுப்பி வைக்குமெனவும் குறிப்பிட்டார்.

பீகாரில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்திருப்பதாகவும், மாநில அரசு கிட்டத்தட்ட செயற்படாத நிலையை எட்டியிருப்பதாகவும் இந்திரா காங்கிரஸ் தெரிவித்துள்ளது பாரதீய ஜனதா, சமாஜவாதி ஜனதா தள் ஆகிய கட்சிகளும் பீகார் தேர்தலை ஒத்திவைப்பது பற்றி ஆலோசனை கூறியுள்ளன. ஆனால் பீகாரை விடவும், உத்தரப் பிரதேசம் குஜராத் மாநிலங்களில் சட்டம், ஒழுங்கு நிலை மிகவும் சீர்கெட்டிருப்பதாகக் குறிப்பிடும் ஜனதா தள், மற்றும் இடதுசாரிக் கட்சிகள் பீகாரில் தேர்தல்களை ஒத்தி வைக்க வேண்டாம் எனக் கோரிக்கை விடுத்துள்ளன.

# பீகார் அரசாங்கத்தை கலைத்துவிட வேண்டாம்

**- வி.பி. சிங்**

(சென்னை)

பீகார் மாநில அரசாங்கத்தை பதவி நீக்கம் செய்ய ஜனாதிபதி தனது சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்த வேண்டாம் என்று ஜனதா தளத் தலைவர் வி.பி. சிங் ஜனாதிபதி ஆர். வெங்கட் ராமனைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய வி.பி. சிங் இது தொடர்பாய் நேற்றுப் பேசிய தாகவும் பீகாரின் சட்டம், ஒழுங்கு நிலைமை மற்றைய மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் மிக நன்றாகவே உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும், பாரதீய ஜனதாக் கட்சிக்கும் மற்றும் சமாஜவாதி ஜனதாக் கட்சிக்கும் ஆதரவு இல்லை என்பதால் அக் கட்சிகள் அந்த மாநிலத்தில் தேர்தலை விரும்பவில்லை என்றும் வி.பி. சிங் குறிப்பிட்டார்.

# ஆர்மேனியா - அசர்பைசான் படைகள் மோதல்

(மொஸ்கோ)

சோவியத் யூனியனின் ஆர்மேனிய. அசர்பைசான் குடியரசுகளின் படைகளுக்கு இடையே சண்டை நடைபெறுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன

பிரச்சினைக்கு உட்பட்ட பிரதேசங்களாகக் கருதப்படும் கிரோவபாத், மெஜானோ பகுதியைச் சுற்றிலும் இச் சண்டை நடப்பதாக சோவியத் கம்யூனிஸ்ட் நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

தாங்கிகளும், இயந்திரத் துப்பாக்கிகளும் இச்சண்டையில் பயன்படுத்தப்படுகின்றன என அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது

இதேவேளை கடந்த ஒரு வார காலமாக இங்கு நடைபெறும் சண்டையில் முப்பத்தியேழு பேர் இறந்துள்ளனர் என்று ஆர்மேனியாவின் பிரதிநிதி சோவியத் பாராளுமன்றத்தின் அவசர கூட்டத் தொடரில் தெரிவித்தார்.

# குர்திஷ் மக்கள் வீடு திரும்புகின்றனர்

(வாஷிங்டன்)

ஈராக்கின் வட பகுதியில் இருந்து ஈராக்கிய இராணுவத்தினர் வெளியேறியதை அடுத்து குர்திஷ் இன மக்கள் அந்தப் பகுதிக்குள் செல்கின்றனர் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை வாஷிங்டனில் இதனைத் தெரிவித்த அமெரிக்க வெளியுறவு அதிகாரிகள் இந்தப் பகுதியை பெரும்பாலும் அமெரிக்க இராணுவத்தினரே பாதுகாத்து வருகின்றனர் என்றும் தெரிவித்தனர்.

மத்திய கிழக்கில்

# துரித சமாதானம் சாத்தியப்பாடானதல்ல

**எட்வேட் ஷெவர் நாட்சே**

(வாஷிங்டன்)

மத்திய கிழக்கில நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்குமறுப்புத்தெரிவிட்பவர்களுக்கு எதிராக தடைகள் விதிக்கப்பட வேண்டும். இவ்வாறு சோவியத்தின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் எட்வேட் ஷெவர் நாட்சே ஆலோசனை தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் வாஷிங்டனில் செய்தியாளரிடம் பேசிய அவர் மேலும் மத்திய கிழக்கில் துரிதமாக சமாதானத்தை ஏற்படுத்துவது சாத்தியமில்லை எனவும் தெரிவித்தார்.

நேற்று முன் தினம் வாஷிங்டனில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் அவர்களையும் வெள்ளை மாளிகையில் திரு எட்வேட் ஷெவர் நாட்சே அவர்கள் சந்தித்திருந்தார்.

# ஏற்றுமதி வருமானம் சிறிலங்கா வரவில்லை

இலங்கையில் இருந்து ஆடை ஏற்றுமதிகளைச் செய்யும் 74 ஏற்றுமதியாளர்கள் தாம் பெற்ற வருமானத்தை இங்கு கொண்டுவரவில்லை என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

எட்டு மில்லியன் அமெரிக்க டொலர்கள் இவ்வாறு கொண்டு வரப்படாமல் இருக்கிறது என்றும், ஏற்றுமதி செய்து ஆறு மாதங்களுக்குள் இந்தப் பணம் இலங்கைக்கு வந்திருக்க வேண்டும் என்றும மத்திய வங்கி தெரிவித்தது.

இதேவேளை செலாவணிக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் ஏற்றுமதியாளர்களின இந்த வருமானம் வெளிநாடுகளில் சேமிக்கப்படலாம் எனத் தெரிவித்தனர்.

## பரிசளிப்பு விழா

மேதினத்தை முன்னிட்டு தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் நடத்தப்பட்ட போட்டிகளின் பரிசளிப்பு வைபவம் 12 ஆம் திகதி ஞாயிறு இரவு 7மணிக்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் மாவட்டச்செயலகக் கலையரங்கில் நடைபெறும். அன்றைய தினம் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் தமது பரிசிலைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் பதநீர் போட்டியில பரிசில் பெற்றவர்களும கௌரவிக்கப்படுவர்.

## எழுதுவினைஞர் இருவர் தெரிவு

பொது எழுதுவினைஞர் சேவையில் அதிவிசேட பதவிக்கு யாழ் செயலகத்திலிருந்து இருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வே சிசு செல்வராசா என்பவரும் செல்வி சுந்தரராசா என்பவருமே அதிவிசேட எழுதுவினைஞர் தரத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (லோ)

# இ. காங்கிரஸ் எம். எல். ஏ சுட்டுக்கொலை

(ஹைதராபாத்)

ஆந்திர மாநிலத்தின் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர் திரு.சென்னா ரெட்டியை நக்சலைட் போராளிகள் வீட்டுக்குள் புகுந்து சுட்டுக் கொன்றிருப்பதாகச் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

## பெற்றுக் கொள்ளவும்

வீதியில்கிடந்து கண்டெடுக்கப்பட்ட ஹொண்டா மோட்டார்சைக்கிள் சாவியொன்றும் சைக்கிள் சாவியொன்றும் திறப்புக்கோர்வையுடன் ஈழநாதம் அலுவலகத்தில ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் நேரில வந்து அடையாளங் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

## நினைவு தின நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் நடாத்தும ஈழத்துத் தமிழ் சுருக்கெழுத்துத் தந்தை அமரர் சி. இராமலிங்கத்தின இரண்டாவது நினைவுதின நிகழ்ச்சி வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8-40 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

சி. குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள நினைவுதின நிகழ்ச்சியின் போது கவியரங்கு மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன.

# துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் பஞ்சாப்பில் சுட்டுக் கொலை

(டில்லி)

பஞ்சாப்பில் நேற்றுப் பிற்பகல் தரன தாரன பொலிஸ் நிர்வாக மாவட்டத்தில் ராதசவுன் கிராமத்தில் நடந்த பெரும சண்டையொன்றின் எல்லைப் பகுதி பொலிஸ் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் அஜித சிங் கொல்லப்பட்டார்.

போராளிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை அவர் மேற்பார்வை செய்துகொண்டிருந்த சமயத்தில் காயமுற்றதை அடுத்து அபேக்கரில உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் காலமானார்.

பொலிஸ் அத்தியட்சகரும் மற்றும் மூன்று பாதுகாப்புப் பணியளரும் நேற்று முன்தினம் பின்னிரவில் தொடங்கி நேற்று மாலைவரை நடந்த மோதலில் காயமடைந்தனர்.

## அமெரிக்கப் படை வெளியேற்றம்

(பாக்தாத்)

தெற்கு ஈராக் பகுதியிலிருந்து கடைசி அமெரிக்கத் துருப்புகளும் மீளப் பெறப்பட்டு வருகின்றது. இன்று முதல் அமெரிக்கப் படைகள் முற்றாக வாபஸ் பெறப்பட்டு அவ்விடத்தில ஐ.நா. படைகள் நிறுத்தப்படுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டிக்செனி வளைகுடாப் பகுதிக்கு ஆறுநாள் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். சவூதி அரேபியா, குவைத் நாடுகளின் அதிகாரிகளையும் சந்தித்து டிக்செனி பேச்சு நடத்தியுள்ளார்.

## பெரும்பான்மை ஏற்கும் புதிய அரசியல் யாப்பு

(பாக்தாத்)

ஈராக்கின் பெரும்பான்மை மக்களால் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க புதிய அரசியல் யாப்பு ஒன்றை நிறைவேற்ற உறுதியான தீர்மானமெடுக்கப்பட்டிருப்பதாக அந்நாட்டின் உதவிப் பிரதமர் தாரிக் அசீஸ் கூறியுள்ளார். வாஷிங்டன் போஸ்ட் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் திரு தாரிக் அசீஸ் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் சதாம் ஹுசைன் ஒருசில தவறுகள் இழைத்துள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டார். ஆனால் நீண்டகாலம் பதவியில் நீடித்தமையே இதற்கான காரணம் எனவும் குறிப்பிட்டார். எனினும் ஈராக்கின் தலைவராக தெரிந்து எடுக்கப்படக் கூடியளவுக்கு அவர் மக்களிடையே பிரபல்யம் பெற்றுள்ளார் என்பதையும் திரு. தாரிக் அசீஸ் சுட்டிக் காட்டியுள்ளார்.

## பங்களாதேஷில் சுழல்காற்று 25 பேர் பலி; 200 பேர் காயம்

(டாக்கா)

பங்களாதேஷில் டாக்கா விறகு அருகே சுழல் காற்று வீசியபோது ஒரு தொழிற்சாலைகள் நிறைந்த ரப்பகுதி சேதம் அடைந்தமையால் சுமார் இருபத்தைந்து பேர் வரையில கொல்லப்பட்டுள்ளனர் மேலும் சுமார் இருநூறு பேர்வரையில் படுகாயமடைந்துள்ளனர் கொல்லப்பட்டவர்களிற் பெரும்பாலானோர் ஐந்து வயதும் நிரம்பாத சிறுவர்கள் ஆவர். மணிக்கு நூறு மைலுக்கு அதிகமான வேகத்தில் வீசிய சுழல் காற்றினால் இறந்தவர்களின எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனத் தெரியவருகிறது மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வாழ்க்கைத் திறன் கல்வி 1991ஆம் ஆண்டுக்கான பயிற்சி பெறாத ஆசிரியருக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 13ஆம் 17ஆம் திகதிகளில் யாழ் கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது. என முல்லைத்தீவு சாரா கல்விப் பிவுக்குப் பொறுப்பான கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார்

மேலும் வாழ்க்கைத் திறன் கல்வி ஆசிரியா ஆலோசகர்களுக்கான கலந்துரையாடல் நாளை யாழ் கல்வித் திணைக்களத்தில இடம் பெறும் எனவும் கூறினார். (லோ)

## சுரங்கத்தில் வெடிவிபத்து 147 தொழிலாளர் பலி

(பீகிங்)

சீன அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலக்கரிச் சுரங்கமொன்றில் இடம் பெற்ற வெடிவிபத்தொன்றில் அங்கு வேலைசெய்து கொண்டிருந்த 147 சுரங்கத் தொழிலாளர்களும் உயிர் இழந்தனர்.

ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற இந்த வெடி விபத்து குறித்து நேற்று சீன மக்கள் தினசரி செய்தி வெளியிட்டது.

அரசாங்கத்தின் கவலையீனத்தாலேயே இந்த வெடிவிபத்து ஏற்பட்டதாக சீன மக்கள் தினசரி வெளியிட்டது.

## காஷ்மீர் தீவிரவாதிகள் விடயத்தில் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

(வாஷிங்டன்)

காஷ்மீரித் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் ஆதரவு வழங்கக் கூடாதென பாகிஸ்தானுக்கான அமெரிக்க பிரதிநிதிகள் சபையின நிர்வாகக்குழு எச்சரித்துள்ளது

இது தொடர்பாக பாகிஸ்தானின் போக்கில் மாற்றங்கள் தெரியாவிடில் பாகிஸ்தானுக்கான அமெரிக்க உதவி மேலும் குறைக்கப்படும் என்றும் அச்சபையின் நிர்வாகக் குழு தெரிவித்துள்ளது.

## இரண்டு பொதுமக்கள் கைது

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவத்தினர் கொம்மாதுறைப் பகுதியில இரண்டு பொது மக்களைக் கைது செய்துள்ளனர். மாரிமுத்து சிவகுரு (வயது 20) சுதர்மன் (வயது 17 ஆகிய இருவரும் கடந்த திங்களன்று அதிகாலை இரண்டு மணியளவில் கைது செய்யப்பட்டவர்களாவர் இவர்கள் இருவரும் மாவடி வேம்பு கிராமத்தைச் சேர்ந்தவர்களாவர்.

## பெற்றுக் கொள்ளவும்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களில் 50வீதமான சனசமூக நிலையத்தினரே 1990ஆம் ஆண்டுக்குரிய நன்கொடைப்பணத்தை இதுவரை பெற்றுக்கொண்டுள்ளனர் ஏனைய சனசமூக நிலையத்தினரும் இவ்வாட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து இந்த நன்கொடைப்பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் வி.பி.பாலசிங்கம் கேட்டுள்ளார்.

50 வீதமான

காட்டியுள்ளனர்.

மேற்படி முத்திரைகள் நாளை 10ஆம் திகதி வரையுமே செல்லுபடியாகும் எனவும் அதன் பின்னர் அம்முத்திரைகளுக்குப் பொருள்கள் வழங்கப்பட மாட்டாது எனவும் ஆகவே இதுவரை அதற்குரிய பொருள்களைப் பெற்றுக் கொள்ளாதவர்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் செயலக அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்

இதேநேரம் மாசிமாதத்திற்கான உணவு முத்திரைகள அந்தந்தப் பகுதி உதவி அரசாங்க அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரை அதனைப் பெறாத பாடசாலை அதிபர்கள் அதனைப் பெற்றுக் கொள்ளுபடியும் அந்த அதிகாரி கேட்டுக்கொண்டார். ச)

காரைநகர்

கொள்ளப் படுகின்றனர்.

நாவலர் மகா வித்தியாலயத்தில நாளை மதியம் 12 மணி முதல் 2 மணி வரை பதிவு செய்து கொள்ளலாம்

பாடசாலைகள்

களைக் குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி ஒத்துழைப்புத் தருமாறு கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மருத்துவ

வேண்டும் என்றும், வருங்காலத்தில இத்தகைய சம்பவங்கள நிகழ்வதைத் தடுக்கும் வழிவகைகளைச் சிபாரிசு செய்யும்படியும் பணிக்கப்பட்டுள்ளார்

வவுனியாவில் இடம்பெற்ற அசம்பாவிதம் குறித்து சிறிலங்கா அரசு தனது மனவருத்தத்தைப் பிரான்சு அரசாங்கத்திற்கு மெடிசின் பிரான்சியர் மருத்துவக் குழுவுக்கும் தெரிவித்துக் கொண்டுள்ளது.

## உள்ளூராட்சித் தேர்தலில் பிரசாரத்தில் புதுவித யுக்தி

(கொழும்பு)

இம்முறை உள்ளூராட்சி, பிரதேச சபைத் தேர்தல்களுக்கு ஆகாய மார்க்கமாகவும் பிரசாரம் செய்யப்படுகின்றது பணவசதி படைத்த வேட்பாளர் ஒருவர் ஒரு சிறிய விமானமொன்றைப் பெற்று அதில் இருந்து பிரசார நோட்டீஸ் பத்திரங்களைப் பறக்கவிட்டிருந்தார். கடந்த ஞாயிறு அன்று மாலையில் கொழும்பு காலிமுகத்திடலில் திரண்டு இருந்த மக்களுக்கு இந்த 'நவீன தேர்தல் யுக்தி'' ஒரு வகையில் ஆச்சரியமாகவும், புதுமையாகவும் இருந்தது.

வாக்காளருக்கு இந்த வேட்பாளரின் செய்தியைக் கொண்ட மும்மொழிப் பிரசுரமொன்றும் விமானத்திலிருந்து தரையில போடப்பட்டது.

இனப்பிரச்சினை

எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை பிரித்தானியா பிரபுக்கள் சபையில் அங்கம் வகிக்கும றிப்பன் பிரபு மாநாட்டை வருட ஆரம்பத்தில் நடத்தாததைக்கண்டனம செய்துள்ளார் இது தொடர்பாக கருத்து வெளியிட்ட றிப்பன் பிரபு மாநாட்டைப் பிற்போடப்பட வேண்டிய அவசியம் ஏன்ஏற்பட்டதென்று எனக்குத் தெரியவில்லை என்றார். வளைகுடா யுத்தத்தின்போது சர்வதேச வர்த்தகம் தடையின்றி நடந்து கொண்டிருந்தது ஆனால் ஒரு மாநாடு கூட்டுவதில் என்ன சிக்கல் எனவும் அவர் கேள்வி எழுப்பினார். மேலும் இலங்கையில் இரத்தம் சிந்தப்படுவதைத் தடுப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்வது எமது முக்கியமான கடமையாகும என்றும் அவர் தெரிவித்தார்

ஆஸ்பத்திரிப்

திருப்படுள்ளன.

அதேபோல இவ்வைத்தியசாலைக்காக எடுத்து வரப்பட்ட எரிபொருள் நிரப்பப்பட்ட பீப்பாக்கள் ஒவ்வொன்றில் இருந்தும் சுமார் 30 முதல் 40 லீற்றர் வரையான எரிபொருள்கள் காணாமல் போய் விட்டதாக இவ்வைத்தியசாலையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறான திருட்டுச் சம்பவங்களால் தமக்கு நிர்வாகத்தில் பல சிரமங்கள் தோன்றி இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

உருக்குலைந்த

போது இராணுவத்தால் கொல்லப்பட்டார் என்றோ யாருடைய சடலம் என்றோ இனம் காணப்படவில்லை.

அதேவேளை வயோதிபப் பெண் ஒருவரின சடலம் வயல்வெளி ஒன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டு தகனம் செய்யப்பட்டுள்ளதாகவும் இச்சடலம் சரவணையைச் சேர்ந்த சின்னம்மா என்பவருடையது என்று இனம் காணப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

(க)

ஊழியருக்கு

கடந்த எட்டு மாதங்களாக வட பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படாததால் நீர் விநியோகத்தாலும் மின்சாரத்தாலும் கிடைக்கும் வரி வருமானம் பிரதேச சபைகளுக்கு இல்லாததால் தான் தற்போது இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த எட்டு மாதங்களுக்குப் பிரதேச சபைகளிலிருந்த மீச்சசெ ச்சப்பணத்தை எல்லாம் பகுதிபகுதியாக இவ்விரு பிரிவு ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டு வந்தது இப்போது எம்மிடம் ஒரு சதமும் கிடையாது தவிர்க்க முடியாத வகையில் இவ்விரு பிரிவு ஊழியர்களுக்கும் சம்பளத்தை நிறுத்தி வைக்க வேண்டியுள்ளது என்றார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்.

இதுபற்றி தமது மேலிடத்திற்கு அறிவித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

(லோ)

## சின்னமடுவில் இராணுவம் மீது சூடு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ள சரவணைக் கிராமத்தில் இராணுவத்தினர் மூன்று வீடுகளை வெடிவைத்து தகர்த்துள்ளனர் கடந்த திங்களன்று மாலை ஐந்து முப்பது மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது இதே நாளன்று சின்னமடுப் பகுதியில் வைத்து இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர் சேதவிபரம் எதுவும் தெரியவில்லை.

மாணவர்கள்

காலை 9 மணி முதல் பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயத்தில பாடசாலை அதிபர்களினால் வழங்கப்படும். மாணவர்கள் அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வவுனியா

குளம் பகுதியில் தற்காலிகமாகத் தங்கியுள்ளனர்.

நான்காம். ஐந்தாம்,ஆறாம் திகதிகளில் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் சொந்தக்காரன்குளம் பாடசாலை, மாதர் பணிக்கர் மகிழங்குளம் கூட்டுறவுச்சங்கம் மாதர்பணிக்கர் மகிழங்குளம் பாடசாலை ஆகியன சேதமாகின. மற்றும் ஓமந்தைப் பாடசாலை ஷெல் தாக்குதலினால் சேதமாக்கப்பட்டது கோழியாகுளப்பகுதியில் விமானத்தாக்குதலினால் இருபதுக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமாகின.

இம்மாதம் 2ஆம் திகதி தொடங்கிய விமானத்தாக்குதலில் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள், இரண்டு அவ்ரோ வை 12 விமானம் ஒன்று. இரண்டு உலங்கு வானூர்திகள் ஈடுபட்டன இந்த விமானங்கள் சொந்தக்காரன் குளம், கோழியாகுளம், மாதர் பணிக்கர் மகிழங்குளம் ஆகிய பகுதிகளில் 250க்கும் மேற்பட்ட குண்டுகளை வீசியுள்ளன இவ் விமானங்கள் காலைதொடங்கி மாலைவரை தாக்குதலில் ஈடுபட்டன இதுவரை இத்தாக்குதல்களினால் பத்துக்குமதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டினால் சிலபொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது இப்பகுதியில் இராணுவம் நிலை கொண்டிருப்பதால், இறந்தவர்களைப் பற்றிய விபரம் தெரியவில்லை. அத்தோடு ஓமந்தை, விளாத்திக்குளம பகுதியிலுள்ள கடைகளுக்கும் இராணுவத்தினர் தீவைத்துக் கொளுத்தியுள்ளனர்.

7ஆம் திகதி இரண்டு அவ்ரோ ஒரு வை12. இரண்டு குண்டு வீச்சு விமானங்கள், இரண்டு உலங்கு வானூர்திகள் காலையும், மாலையும மாதர்பணிக்கர் மகிழங்குளம், பூவரசங்குளம் ஆகிய பகுதியில் தாக்குதலைத் தொடுத்தன. இரவு வேளையில மாமடு இராணுவ முகாமிலிருந்து 100க்கும் மேற்பட்ட ஆட்டிலறிஷெல்கள் ஏவப்பட்டன

நேற்றும் தாக்குதல்கள் தொடர்ந்தன மாதர் பணிக்கர் மகிழங்குளம், பூவரசங்குளப்பகுதியில் காலையில் இருந்து மதியம் 12மணிவரை இருபதுக்குமேற்பட்ட குண்டுகள் போடப்பட்டன.

செய்தி அச்சுக்குப் போகும் வரையில் தாக்குதல் நடைபெறுகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.